புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **03 மே, 2021**

**பத்திரிகை செய்தி**

புதுச்சேரி எல்லைபிள்ளைச்சாவடியில் அமைந்துள்ள ராஜிவ்காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களிடம் கொரோனா சான்றிதழ் கேட்டு திருப்பி அனுப்பப்பவதாக பொது மக்கள் புகார் செய்தியை அடுத்து மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் நேற்று(02-05-2021) ராஜிவ்காந்தி மகளிர் மருத்துவமனையை ஆய்வு செய்தார். அப்போது, மருத்துவமனை வளாகத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான கொரோனா பரிசோதனை மையம் ஒன்றை உடனடியாக அமைக்க வேண்டும். பரிசோதனை முடிவுகளை உடனடியாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதனை அடுத்து இன்று(03-05-2021), மருத்தவமனை வளாகத்தில் புறநோயாளி கர்ப்பிணிப் பெண்களுக்கான கொரோனா பரிசோதனை மையத்தை தொடங்கி வைத்தார். துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C. சந்திரமௌலி, டாக்டர் A. P மகேஸ்வரி, சுகாதாரத்துறைச் செயலர் திரு. அருண், சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் மோகன் குமார், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சுஜாதா ஆகியோர் உடனிருந்தனர்.

பத்திரிகையாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- மருத்துவமனைக்கு வரும் புறநோயாளி கர்ப்பிணிப் பெண்கள் கொரோனா பரிசோதனைக்காக திருப்பி அனுப்ப படுவதாக வந்த செய்தியை அடுத்து நேற்று ஆய்வு செய்தேன். உள் நோயாளிகளுக்கு கொரோனா பரிசோதனை இங்கேயே நடத்தப்படுகிறது ஆனால் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் இருந்து அல்லது குடும்பத்தில் யாருக்கேனும் கொரோனா தொற்று இருந்து மருத்துவமனைக்கு வரும் புறநோயாளிகளுக்கு பரிசோதனை செய்ய வேண்டி இருக்கிறது.
- நோயாளிகளை திருப்பு அனுப்புவதை தவிர்க்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் பரிசோதனைக்காக போகும்போது மற்றவர்களிடமிருந்து நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, புறநோயாளிகளாக வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா பரிசோதனை செய்ய ஒரு மையம் இன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

- சாலைகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. மக்கள் அவதிப்படக் கூடாது என்பதற்காகத்தான் அத்தியாவசிய கடைகள் திறந்திருக்கின்றன. தேவையான அத்தியாவசியப் பொருட்களை மக்கள் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி வெளியே வருவதைத் தவிர்க்க வேண்டும. சலுகைகளை மக்கள் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. இல்லையென்றால் முழுமையான ஊரடங்கிற்கு செல்லும் நிலை ஏற்படும்.
- இன்று இரவு வரை ஏற்கனவே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அனைத்துக் கட்டுப்பாடுகளும் அடுத்த திங்கட்கிழமை வரைத் தொடரும்.
- மக்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் வீட்டிலேயே இருக்க வேண்டும். வீட்டில் இருக்கும் போது முகக்கவசம் அணிந்து இருக்க வேண்டும். அடிக்கடி வெளியே வருவதை தவிர்க்க வேண்டும்.
- நேற்றைய தினம், அரசியல்வாதிகளும் தொண்டர்களும் அதிகாரிகளும் கூட்டம் கூடுவதைத் தவிர்த்தார்கள். அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த நிலை தொடர வேண்டும். கூட்டம் கூடாமல் வெற்றி விழாக்களை கொண்டாட வேண்டும் என்று கூறினார்.

அதோடு, சுமார் 11 கோடி செலவில், 50 புதிய வென்டிலேட்டர் கருவிகள், 100 மானிட்டர் கருவிகள், 10 அவசர ஊர்திகள் வாங்குவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதற்கான கோப்பிற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார். மேலும், 500 தீவிர சிகிச்சைப் படுக்கைகள் மற்றும் பிராணவாயு இணைக்கப்பட்ட படுக்கைகளை அதிகரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.